




அமரர்

# செல்வநாயகம் கமலநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

03.06.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தும் மறையாது என்றும் எம் இதயத்தில்
குடிகொண்ட குல விளக்கு



அமரர்

# செல்வநாயகம் கமலநாதன்

தவப்பேறு
06.12.1948

சிவப்பேறு
05.05.2019

திதி நிர்ணய வெண்பா

விகாரி ஆண்டு சித்திரைத் திங்கள்
சந்தித்த சனி அமாவாசைத் திதியே
சான்றோன் கமலநாதன் சலனம் இன்றி
நீர்வேலி கந்தன் தாள் சேர்ந்தாரறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

சிறையாரு மடக்கிளியே
யிங்கேவா தேனொடு பால்
முறையாலே யுணத்தருவன்
மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி
புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் திருநாமம்
எனக்கொரு காற்பேசாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லக விளக்கது விருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங்காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

## திருவாசகம்

இந்திரிய வயமங்கி
இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்து போய்
அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம்
அணிகொள் தில்லை கண்டேனே.

## திருவிசைப்பா

அன்னநடையார் அமுதமொழியார்
அவர்கள் பயில் தில்லைக்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலந்தன்னுட்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோள் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்பெற்ற
தார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

# திருமந்திரம்

குருட்டினை நீக்கும் குருவினைக்கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழுமாறே.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.

# பெரியபுராணம்

கற்பனை கடந்த சோதி
கருணையே உருவம்ஆகி
அற்புதக்கோலம் நீடி
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவியோமம் ஆகும்
திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற
பூங்கழல் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

இசைந்த ஏறுங்கரியுரி போர்வையுமெழில் நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையு மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையுமுடி மீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா.

உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்தபோதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசை மேவிய பெருமானே.

# வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ். நீர்வேலி தெற்கு கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும்,

துன்னாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட

இளைப்பாறிய வடபிராந்திய செயலாற்று முகாமையாளர்

[இலங்கை போக்குவரத்துச்சபை]

அமரர்

# செல்வநாயகம் கமலநாதன்

அவர்களின் ஞாபகார்த்த

# 'நினைவுமலர்'

03.06.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பத்தின் குலவிளக்காக
எல்லோருக்கும் ஏற்றவராக
எழிலுடன் உழைத்து
எளிமையுடன் வாழ்ந்து
எம்மை ஏற்றமுற வைத்து
ஜனநாயகப் பண்புடன்
சமூகத் தொண்டராக மிளிர்ந்து
தந்தையாய் தமையனாய் கணவனாய்
மாமனாய் தாத்தாவாக வாழ்ந்து
சலனமின்றி எம்மைப் பிரிந்து
என்றும் எம் நினைவில் அகலாத
எமது குடும்பத்தலைவருக்கு
இம்மலரினை கண்ணீர் மலர் தூவி
அன்னாரின் பாதக்கமலங்களில்
காணிக்கையாக்குகின்றோம்.



**இவ்வண்ணம்**

**- குடும்பத்தினர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் பயணம்

துன்னாலையூர் சின்னையா நீர்வேலியூர் சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரி இராசம்மா ஆரம்பக்கல்வியை நீர்வேலியிலுள்ள (இன்றைய அத்தியார் இந்துக்கல்லூரி) பாடசாலையில் கற்றார். தந்தையார் அனுராதபுரநகரில் வர்த்தகதொழில் செய்தமையால் தாயார் மற்றும் சகோதர சகோரியுடன் அனுராதபுர நகரில் குடியேறினார். தனது இடைநிலைக்கல்வியை அனுராதபுர நகரிலுள்ள கன்னியர்மடம் பாடசாலையில் கற்றும் வரும் நாளில் தாயார் இறந்துவிடவே சகோதரங்களின் கல்வி தடைப்படாமல் இருப்பதற்காக மூத்த பெண் பிள்ளையாகிய இவர் கல்வியை இடையிலே நிறுத்தி குடும்பப் பொறுப்பை தந்தையுடன் இணைந்து ஏற்றுக்கொண்டார். திருமணபருவம் அடைந்ததும் தந்தையார் துன்னாலையைச் சேர்ந்த ஏகாம்பரம் பொன்னம்மா தம்பதிகளின் புத்திரன் நெற் சந்தைப்படுத்தல் களஞ்சியத்தில் முகாமையாளராக கடமையாற்றிய செல்வநாயகத்தை திருமணம் செய்து வைத்தனர்.

இவர்களின் இல்லற வாழ்வில் 1948 மார்கழித்திங்கள் 06ம் நாள் மூத்த மைந்தனாய் கமலநாதன் வந்துதித்தார். அனுராதபுர நகரில் தனது பேரன், சிறியதாய், மாமன்மார் மற்றும் பெற்றோருடன் வளர்ந்த இவர் 1950 களின் நடுப்பகுதியில் தனது தாயாரின் கிராமமான நீர்வேலியில் தாயார் மற்றும் உறவினருடன் குடியேறினார். தந்தையார் தொழில் நிமித்தம் அனுராதபுரத்தில் தங்கியிருந்தார். இவருக்கு பத்மநாதன், செல்வநாதன் ஆகிய இரண்டு தம்பிமார் வந்துதித்தனர். இவர் தனது ஆரம்பக்கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் தொடங்கி கற்றுவரும் நாளில் 1961ம் ஆண்டு மதவாச்சியில் பாம்பு தீண்டி தந்தையார் இறைவனடி சேர்ந்தார். அனுராதபுரம் கச்சேரியில் பிரதம எழுதுவினைஞராக கடமையாற்றிய மூத்ததாய் மாமனாரின் ஆதரவோடும் ஆசிரியையான சிறிய தாயாரின் துணையோடும் தாய் மற்றும் தம்பிமாருடன் வசித்து வந்தார். ஆரம்பக்கல்வியை நிறைவு செய்து இடைநிலைக்கல்வியை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் கற்று தேறிய பின் குடும்ப பொருளாதார நிலை கருதி 1969இல் இரத்மலானை இ.போ.ச டிப்போவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிப்போ பரிசோதகராக தொழில் புரிய ஆரம்பித்தார். இ.போ.ச வில் பல பதவியுயர்வுகளைப் பெற்று மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கிய இவர் 1983 இல் இரத்த உறவினராகிய இராஜேஸ்வரியை திருமணம் புரிந்து கொழும்பில் இன்பமாய் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கு 1986 இல் கிரிஷாந்தியும் 1987 இல் கிரிதரனும் மக்களாக இவ்வுலகில் உதித்தனர்.

தம்பி பத்மநாதன் ஆசிரியர், அதிபராக கடமையாற்றி இளைப்பாறவும் மற்றைய தம்பி செல்வநாதன் 1980களின் ஆரம்பத்தில் இங்கிலாந்து சென்று கல்விகற்று தொழில்புரிந்து வரவும் அவர்களுடன் மிகப் பிரியமாக இருந்து வந்தார்.

1. I) பிள்ளைகளின் கல்வி தொழில், மருமக்களின் கல்வி, தொழில்
2. 5 வருடம் சம்பளமற்ற விடுமுறையில் U.K சென்றார்
3. பதவியுயர்வுகள் சாலைமுகாமையாளர், வடபிராந்திய செயலாற்று முகாமையாளர்
4. இளைப்பாறல் 2008, ஒரு வருடம் ஒப்பந்த அடிப்படையில் சேவை நீடிப்பு 2010 வரை
5. இந்தியாவில் மகனின் திருமணம்
6. பேரப்பிள்ளைகள் – வேனுஷன், டானிக்கா
7. 05.05.2019 இறப்பு

I) மகள்

கிரிஷாந்தி விக்கினேஸ்வரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

மகன்

கமலநாதன் கிரிதரன்
நிதிக் கணக்காளர்,
லண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகன்

திருநாவுக்கரசு விக்கினேஸ்வரன்,

சிரேஷ்ட விரிவுரையாளர்,

யாழ்.பல்கலைக்கழகம்.

மருமகள்

ஜசிந்தா கிரிதரன்

Msc - Masters of Information

Systems at Central Queensland

University (CQU)

Brisbane, Australia.

**செ.பத்மநாதன்**

ஓய்வுநிலை அதிபர்

யாழ்.மத்திய கல்லூரி

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

பலரை அழவைக்கும் உண்மையை விட சிலரைச் சிரிக்க வைக்கும் பொய் மேலானது.

**– வாட்சன் சிமித் –**

உடலின் தசைகள் தளரலாம், மனதின் தன்னம்பிக்கை தளரக்கூடாது.

**– அன்னை தெரேசா –**

என்னிடம் எதைவேண்டுமானாலும் கேள், ஆனால் நேரத்தை மட்டும் கேட்காதே.

**– நெப்போலியன் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தொண்டும் சனநாயகப் பண்பும் கொண்ட உறவுப்பாலம் உதிர்ந்தது

செல்வநாயகம் இராசம்மாவின் மூத்த புத்திரனாக அமரர் கமலநாதன் அவர்கள் அனுராதபுரத்தில் 1948இல் பிறந்து, வளர்ந்து, நடைபயின்று, மழலை மொழி பேசி பின் தாயாரின் கிராமமான நீர்வேலியை வாழ்விடமாகக் கொண்டு தனது ஆரம்ப இடைநிலைக்கல்வியை அத்தியார் இந்துக் கல்லூரியிலும், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியிலும் பூர்த்தி செய்தார். தந்தையை பதுமவயதில் இழந்து தன் கல்வியை தொடர்ந்து பூர்த்தி செய்து இருபது வயதில் இரத்மலானை இலங்கை போக்குவரத்துச் சபையில் சாலைப் பரிசோதகராக பதவியேற்றார். தாய் தம்பியர் சகிதம் தனது குடும்பப் பொறுப்பை தானே ஏற்றுக்கொண்டார். தமது குடும்ப இரத்த உறவினரான துன்னாலையைச் சேர்ந்த வேலும்மயிலும் இராஜேஸ்வரியை 1982இல் பதிவுத் திருமணம் செய்து 1983இல் திருமணம் செய்து கொண்டார். 1986இல் கிரிஷாந்தியும் 1987இல் கிரிதரனும் மக்களாக இவ்வுலகில் உதித்தனர். நாட்டில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக 1990இல் விடுப்புப் பெற்று இங்கிலாந்து சென்று சுமார் ஐந்து ஆண்டுகள் இலண்டனில் வாழ்ந்து தொழில் புரிந்து ஊர் திரும்பினார். தனது இல்லற வாழ்வின் பெரும் பகுதியை துன்னாலையிலும் ஏனைய காலப் பகுதிகளை கொழும்பு – கிளிநொச்சி – நீர்வேலி – யாழ்ப்பாணம் ஆகிய வதிவிடங்களில் வாழ்ந்தும் தனது குடும்ப, தொழில் கடமைகளை செவ்வனே நிறைவேற்றினார்.

பருத்தித்துறை சாலையில் சாலை முகாமையாளராக பதவி உயர்வுபெற்று, பின்பு வடபிராந்திய செயலாற்று முகாமையாளராகவும் பதவி உயர்வு பெற்றார். முகாமைத்துவப் பணியில் ஈடுபடும் காலத்தில் அரசியல் வாதிகளையும், இராணுவத்தினரையும், விடுதலைப் புலிகளையும் ஒரே காலக்கட்டத்தில் அனுகி ஒரு புறம் சிங்கம் – மறுபுறம் புலி இரண்டுக்கும் நடுவில் கலை மானாக கண்ணியமாக கடமை புரிந்தார். இவரது இத்திறன் கண்டு அரசு இளைப்பாறிய பின்பும் – மும்மொழி ஆற்றலைக் கருத்தில் கொண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவை நீடிப்பை வழங்கிக் கௌரவித்தது. 8 ஏப்ரல் 2010இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் செயலாற்று முகாமையாளராக இருந்து யாழ்.தேர்தல் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்த யாழ்ப்பாணத்துக்குரிய பஸ் வண்டிகளை கொழும்புத் தலைமை வேறு மாவட்டங்களுக்கு வழங்குமாறு வலியுறுத்த – யாழ் அரச அதிபருக்கு அளித்த வாக்குறுதிக்கிணங்க பஸ் வண்டிகளை வழங்கி (தனது ஒப்பந்த கால நீடிப்பை சில காலத்தின் பின் இடைநிறுத்துவார்கள் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்குணர்ந்தும்) தனது சனநாயகக் கடமைகளை கண்ணியமாக நிறைவேற்றி – சனநாயகப் பண்பை நிலை நாட்டினர்.

துன்னாலை ஆயில் நின்றொல்லை (வல்லியானந்தம்) விநாயகர் ஆலய புனர்நிர்மாண கும்பாபிஷேக பொருளாளராக 01.06.1997 தொடக்கம் 30.06.2001 வரை இருந்து திருப்பணி வேலைகளுக்காக சுமார் 2.3 மில்லியன் ரூபா திரட்டியும், கும்பாபிஷேக நிதியாக ரூபா 1 மில்லியன் திரட்டியும் புனர்நிர்மாண கும்பாபிஷேக பணிகளை நேர்மையுடன் நிறைவேற்றினார். ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர் திரு.ஆ.சுந்தரலிங்கம் மூலமாக கணக்காய்வு செய்யப் பெற்ற வரவு செலவுக் கணக்கறிக்கையை உடன் சமர்ப்பித்து மக்கள் நன்மதிப்புடன் பணிபுரிந்த சமூகத் தொண்டராக விளங்கினார். தனக்குக் கிடைத்த மாகாண சமாதான நீதவான் பதவியை பின்னர் அகில இலங்கை சமாதான நீதவானாகப் பெற்று வாழ்விட மாற்றங்களுக்கிடையில் தன்னால் இயன்ற முறையில் அகில இலங்கை சமாதான நீதவானுக்குரிய சமூகப் பணியை வந்தாரை வரவேற்று பண்புடன் பணிபுரிந்து பரவசமடைந்தார்.

2017 நவம்பரின் மனைவி மறைந்த பின் அமரரின் இதழ்களின் ஓரத்தில் ஒரு வாட்டம் தெரிந்தது. அதில் அவருடன் கலந்திட வேண்டுமென்ற ஏக்கமும் புரிந்தது. இருந்தும் பேரன் வேணுஷன், பேத்தி டானிக்கா அவர்களை வளர்த்தெடுப்பதில் மகள் கிரிஷாந்திக்கு உதவிட வேண்டுமென்ற மனப்பாங்கும், தன் மகனுக்கு ஏற்ற மனைவியை தேர்ந்தெடுத்து திருமணம் நடத்திட வேண்டுமென்ற நாட்டமும் தொனித்தது. தன் கடமைகள் தொடர தன் மகனுக்கு ஏற்ற மனையாளாக குடும்பத்தவரின் தெரிவாக மருமகள் விநாயகமூர்த்தி ஜசிந்தா அமைந்திட இலண்டனில் இருந்து வருகைதந்த மகன் கிரிதரன் ஜசிந்தா திருமணமும் சுற்றம் சூழ இந்தியாவில் நிறைவுடன் இனிது நிறைவேறியது. நிம்மதிப் பெருமூச்சுடன் வாழ்க்கைப் பயணமும் தொடர்ந்தது. காலச்சக்கரம் சுழன்றது. நேரம் நெருங்கிட காலனும் தன் பாசக்கயிற்றை சடுதியில் வீசி சான்றோனாகிய கமலநாதனை அழைத்திட்டார் 05 ஞாயிறு மே திங்கள் 2019 இல் – குடும்ப உறவும், சமூகத் தொண்டும், சனநாயகப் பண்பும் கொண்ட உறவுப்பாலம் உதிர்ந்தது.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**க.கதிரமலை**
ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் (கணக்கியல்)
உயர்தொழினுட்பவியல் நிறுவனம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகப் பேருரை

**பி**ரேமையின் திருஉருவங்களே!

நீங்கள் இறைவனைத்தேடி அலைய வேண்டியதில்லை. அவன் உங்களைத் தேடிவருவான். இறைவன், கோயில்கள், மசூதிகள் அல்லது கிறிஸ்தவ தேவாலயங்களில் வசிப்பதில்லை. இவையெல்லாம் மனிதனின் கட்டிட அமைப்புக்கள். இறைவன் தனக்கென்று தானே கட்டிய கோயிலான மனிதஉடலில் தான் வசிக்கிறான். மனித உடலே ஒரு வாழும், ஒரு நடக்கும், ஒருபேசும் கோவிலாகும். மனிதனால் கட்டப்பட்ட எந்த வழிபாட்டுத்தலமும் இறைவனாற் படைக்கப்பட்ட இந்தக் கோவிலின் சக்தி மற்றும் புனித தத்துவத்திற்கு இணையாக முடியாது. இந்தக்கோவில் செங்கல் மற்றும் சுண்ணாம்பால் கட்டப்பட்டதல்ல. எந்தக் கட்டடக்கலைஞரும் இதை வடிவமைக்கவில்லை. எந்தப் பொறியியல் வல்லுனரும் கட்டவும் இல்லை. இந்தக் கோவில் இறைவனது ஸங்கற்பத்தினால் ஆனது நீங்கள் உங்களது உடலை ஒரு இறைவனது பரிசாகக் கருதி இந்தப் புனித பரிசைப் பாதுகாக்க வேண்டும். அவனது ஆணைக்கு அடிபணிந்து புனிதமான செயல்களில் மட்டுமே ஈடுபடுங்கள் தன்னலமற்ற பிரேமையை அபிவிருத்தி செய்து கொண்டு உங்களால் முடிந்தவரை அதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். பின்னர் நீங்கள் ஆத்ம மதத்துவத்தின் இனிய நறுமணத்தை அனுபவிப்பீர்கள். எப்போது உங்கள் மனம் நற்சிந்தனைகளான சத்யம், பிரேமை, சகிப்புத்தன்மை மற்றும் பரிவு ஆகியவற்றால் நிரம்பி இருக்கிறதோ அப்போது உங்கள் வாழ்க்கையும் சாந்தி மற்றும் அமைதி, பரிவு ஆகியவற்றால் நிரம்பியிருக்கும்.

**— பாபா —**

அமரர் திரு.கமலநாதன் அவர்களும் இறைவனால் கட்டப்பட்ட கோவிலில் இறைவன் கட்டளைகட்கு பணிந்து புனிதமான செயல்களில் ஈடுபட்டு பிரேமையை வளர்த்துக் கொண்டே வாழ்ந்து கொண்டிருந்தார். இவர் இறுதியை நெருங்குவதற்கு சில நாட்களுக்கு முன்னே "எதுவுமே பிரயோசனமில்லை இறைவன் ஆணைக்கு முன்னாலே" என்று கூறிய வார்த்தைகள் இன்னமும் எனது காதுக்குள் கேட்டுக் கொண்டிருக்கின்றது. அவர் அத்ம தத்துவத்தைப் புரிந்து கொண்டு விட்டார். இலகுவாக இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திப்போம்.

**ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**சாந்தக்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதரை மதிப்போம்

**பி**ன்பு தூங்கி பின்றலின்றி எழுந்திடுவாள்
தன்குடன் குடும்பம் தானும் வாழவும்
என்றூழ் மாதரை என்றும் ஏற்போமே!

பிரியன் மேலும் பிரிய முற்றும்
பிரிதல் லில்லா பிராட்டியாய் வாழும்
பிரியை மாதரை பிரதமம் செய்வோமே!

தாத்திரி நாயகி தங்கமேயர் அமெரிக்கா
அதிபரை அணுகி ஆதிக்கம் பெருக்கி
யூதரைக் காத்த யூகியாய் மதிப்போமே!

பின்றல் – பின்னிடுதல் தன்கு – உளக்களிப்பு
என்றூழ் – செஞ்சுடர் பிரியன் – கணவன்
பிரியை – மனைவி பிரதமம் – முதன்மை
தாத்திரி – பூமி

**கதிரா**

வேதத்திற்கு உலகம் பகை
உலகத்திற்கு ஞானம் பகை
வே.ஆ.சிதம்பரப்பிள்ளையின் பழமொழித் தீபிகையிலிருந்து

கடமைகளை தெய்வீகக் கட்டளைகளாக போற்றுவதே சமயம்
**– இம்மானுவேல் காண்ட் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RIP BOOK

*In loving Memory of*
*Selvanayagam Kamalanathan*
1948 - 2019

இலங்கை போக்குவரத்துச் சபை வடபிராந்திய செயலாற்று முகாமையாளராக சேவையாற்றி ஓய்வுநிலை அடைந்ததுடன் அன்பும் பண்பும் ஒருங்கே பெற்ற உயரிய ஆன்மா செழிப்பு மிகு நீர்வேலி தெற்கு கந்தசாமி கோவிலடியில் 6/De/1948 இல் செல்வநாயகம் இராசம்மா தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வனாய் கமலநாதன் அவர்கள் அவதரித்தார்.

கமலநாதன் அவர்கள் பத்மநததன், செல்வநாதன் ஆகிய உடன் பிறப்புக்களுடன் அழகு நிறைந்த ஊரில் இனிமையாக வளர்ந்தார்.

**திருமண வாழ்க்கை**

அன்பும் அழகும் நிறைந்த இவர் மெல்ல மெல்ல வளர்ந்து மிடுக்கான தோற்றத்துடன் , பண்பு நிறைந்த நல்லுள்ளம் கொண்டவராக விளங்கியதுடன், வேலும் மயிலும் இலட்சுமியம்மா தம்பதிகளின் அன்பு மகள் இராஜேஸ்வரி அவர்களுடன் திருமண பந்தத்தில் இணைந்து இன்பமாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து கிரிஷாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ்.மாவட்ட செயலகம்) கிரிதரன் எனும் அழகுப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்ததுடன் விக்கினேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஜசிந்தா ஆகியவர்களுக்கு திருமணம் முடித்து வைத்து தனது கடமையை சிறப்புடன் செய்ததுடன் வேனுஷன், டானிக்கா ஆகிய பேரப்பிள்ளைகளை அணைத்து மகிழ்ந்தார்.

இனிமையான வார்த்தைகள் பேசுவதுடன், இரக்ககுணம் நிறைந்தவராகவும், அனைவருக்கும் உதவிகள் புரியும் குணம் கொண்டும் விளங்கினார். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என மகிழ்வுடன் வாழ்ந்த இவர் 05.05.2019 இல் 70 வயதில் துன்னாலை வடக்கில் இறையடி எய்தினார்.

"கடமை வீரன் காலத்தேவன், கருணை அழகன் கருத்துள்ளம், காலக்கணிப்பன், கதைபேசும் மன்னன் காலன் அழைத்தான் கலங்கி அழுகிறோம்

## REST IN PEACE



**06 Dec 1948 - 05 May 2019**

**Selvanayagam Kamalanathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5/16/2019 Neervely Welfare Association-Canada

நீர்வேலி நலன்புரி சங்கம் - கனடா Neervely Welfare Association - Can

CANADA 150 NEERVELY.CA



இளைப்பாறிய வடபிராந்திய செயலாற்று முகாமையாளர்
இலங்கை போக்குவரத்துச்சபை
வயது 70
நீர்வேலி (பிறந்த இடம்) துன்னாலை வடக்கு

**தோற்றம் :** 06 DEC 1948 **மறைவு :** 05 MAY 2019

**யா**ழ்.நீர்வேலி தெற்கு கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், துன்னாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் கமலநாதன் அவர்கள் 05.05.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் (குலம்) இராசம்மா (நீர்வேலி) தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான வேலும்மயிலும் இலட்சுமியம்மாள் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கிரிசாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் – யாழ்.மாவட்ட செயலகம்), கிரிதரன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாதன் (இளைப்பாறிய அதிபர் அத்தியார் இந்து கல்லூரி – நீர்வேலி, மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்), செல்வநாதன் (இலண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், விக்கினேஸ்வரன் (சிரேஸ்ட விரிவுரையாளர் – யாழ்.பல்கலைக்கழகம்), ஜசிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரின் அன்பு மாமனாரும், வேனுஷன் , டானிக்கா ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், மணிலால்தேவி (இலங்கை), சிவதர்சினி (இலண்டன்), ராஜலட்சுமி (இலங்கை), காசிதாசன் (துபாய்), ஜெயலஷ்சுமி இலண்டன்), சிவசுப்பிரமணியம் ஆனந்தன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 06.05.2019 திங்கட்கிழமை அன்று மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 12.00 மணியளவில் ஓடக்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

முகவரி : வல்லியானந்தப் பிள்ளையார் கோவிலடி, வடக்கு கரவெட்டி, துன்னாலை.

தொடர்புகளுக்கு
கிரிதரன் – மகன்
Mobile : 447415119456

கிரிசாந்தி – மகள்
Mobile : 44776516645

விக்கினேஸ்வரன் – மருமகன்
Mobile : 94773400701

பத்மநாதன் – சகோதரன்
Mobile : 94776589642

செல்வநாதன் – சகோதரன்
Mobile : 44807784478

கதிரமலை – சகலன்
Mobile : 94718943178



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை காக்கும் தேனீக்களின் தேன் மனிதனை காக்கும்

# Inside Beehive

தேன் மிகவும் சுவையானது அதனால் தான் நம் முன்னோர்கள் தமிழை தேனுடன் ஒப்பிட்டு தேனிலும் இனியது தமிழ் என்று சொல்லிவைத்திருக்கிறார்கள்.

பண்டைய தமிழ் மருத்துவ முறைகளிலே தேன் ஒரு முக்கிய பங்கு வகித்திருக்கிறது. இது மருத்துவத்துறையில் 5000 வருடங்களுக்கு மேலாக பயன் படுத்தப்பட்டு வருகிறது.

இத்துணை அதீத இனிப்புச்சுவை கொண்ட தேன் உண்மையிலேயே உடல் நலத்துக்கு பாதுகாப்பானதா? இது சம்பந்தமான ஆய்வுகள் ஏதாவது நடத்தப் பட்டிருக்கின்றனவா? நீரிழிவு உள்ளவர்கள் இதனை பாவிக்கலாமா? என்பது போன்ற பல வினாக்கள் எம்முன்னே எழுகின்றன.

தேன் என்றால் என்ன? அதில் என்னென்ன பதார்த்தங்கள் அடங்கி இருக்கின்றன என்பதை நாம் முதலில் தெரிந்து வைத்திருக்க வேண்டும். தேனிலே பிரக்ரோஸ், குளுக்கோஸ், மோல்ரோஸ், சுக்குரோஸ் எனப்படும் 4 வகையான வெல்லங்கள் காணப்படுகின்றன.

அத்துடன் இத்தேனிலே புரதத்தின் அடிப்படை அலகுகளான அமினோ அமிலங்கள் காணப்படுகின்றன.

இவற்றிற்கு மேலதிகமாக தேனிலே பெருமளவு விற்றமின்கள் செறிந்து காணப்படுகின்றன. விற்றமின் B2, B4, B5, B6, B11 விற்றமின் K விற்றமின் C போலிக்கமிலம் போன்றன பல விற்றமின்கள் ஒன்றாகக் காணப்படுகின்றன.

இவற்றோடு பல முக்கியமான கனியுப்புக்களையும் இந்தத் தேன் உள்ளடக்கி இருக்கிறது. இரும்பு, நாகம், கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம், செலேனியம், மங்கனீசு போன்ற பல கனியுப்புக்களின் கலவையாகவும் இது காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தையுமே தேன் உள்ளடக்கி இருப்பதால் இது உலகிலே கிடைக்கக்கூடிய இயற்கையான விற்றமின் ரொனிக்குகளில் முதல் தரமானதாக கணிக்கப்படுகிறது.

தேனிலே நோய்க்கிருமிகளை கொல்லும் தன்மையும் அவற்றின் பெருக்கத்தை தடுக்கும் தன்மையும் இருப்பது பல ஆய்வுகளின் மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

காயங்களுக்கு இதனை பூசி விடும்பொழுது இது தொற்று ஏற்படாமல் தடுக்கும் ஒரு கவசமாகவும் தொற்று ஏற்படுத்தும் கிருமிகளை கட்டுப்படுத்தும் ஒரு மருந்தாகவும் தொழிற்படுவதாக ஆய்வுகள் காட்டிநிற்கின்றன.

அத்துடன் தேனானது ஒரு அன்ரி ஒக்சிடென்ற் ஆகத் தொழிற்பட்டு உடற்கலங்களை பாதுகாக்க உதவுகிறது என்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

தேன் சம்பந்தமான ஆரம்ப ஆராய்ச்சிகள் குருதியிலே HDL எனப்படும் நல்ல கொலஸ்ரோலை அதிகரிப்பதற்கும் trigliceride எனப்படும் தீய கொழுப்பை குறைப்பதற்கும் தேன் உதவிபுரிகின்றது என்பதை காட்டி நிற்கின்றது.

உடலில் ஏற்படும் அழற்சி பல நோய்களுக்கு வித்திடுகின்றன. தேன் Inflammation என்று சொல்லப்படுகின்ற உடலில் ஏற்படும் அழற்சிகளை கட்டுப்படுத்துகின்றது. இதன்காரணமாக இது நாட்பட்ட வரண்ட இருமலையும் தொண்டை அழற்சியையும் கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் குடலில் ஏற்படும் அழற்சிகளை குறைத்து வயிற்றோட்டத்தை கட்டுப்படுத்த உதவுகிறது.

ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தேன் கொடுப்பது நல்லதல்ல.

நீரிழிவு உள்ளவர்களுக்கு தேன் சிறந்ததா? என்பது சம்பந்தமாக பல்வேறுபட்ட ஆராய்ச்சி முடிவுகள் கிடைத்தவண்ணம் இருக்கின்றன. நீரிழிவு உள்ளவர்களில் இரத்தத்தின் கொழுப்பை குறைப்பதற்கும் இன்சுலீனின் சுரப்பு வீதத்தை அதிகரிப்பதற்கும் தேன் உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அதிகளவு தேனைஉட்கொண்டால் நீரிழிவு உள்ளவர்களிலே குருதி குளுக்கோசின் அளவு அதிகரிப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அதிகரிப்பானது அதனை ஒத்த சீனி உட்கொள்ளும் பொழுது ஏற்படும் அதிகரிப்பினும் பார்க்கக்குறைவாக காணப்படுகிறது.

எனவே நீரிழிவு உள்ளவர்கள் அதிகளவு தேன் உட்கொள்ளுவது பாதுகாப்பானதா என்பது பற்றி விரிவான ஆய்வுகள் பல செய்யப் படவேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் தேனானது சீனியிலும் பார்க்க பல மடங்கு பாதுகாப்பானது என்பது தெளிவானது, உறுதியானது.

உலகளாவிய அளவிலே வருடம்தோறும் 1.3 million தொன் தேன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. காரணம் இதனை உணவாகவும் மருந்தாகவும் விற்றமின் ரொனிக் ஆகவும் வெளிப்பூச்சு மருந்தாகவும் பலராலும் பாவிக்கப்பட்டு வருவதால் இதன் தேவை அதிகமாக இருக்கிறது.

எமது பிரதேசங்களிலே தேன் உற்பத்தியின் அளவு மிகவும் குறைவாக இருக்கிறது. இது ஊக்குவிக்கப்பட வேண்டும். பயிர்களுக்கு மருந்து விசிறுவது தேனீக்களை அழித்துவிடுகின்றது.

ஒரு விவசாயி தனது தோட்டத்திற்கருகே தேனீ வளர்க்கிறான் என்றால் அவன் ஒரு இயற்கை விவசாயி என்பதை உறுதிப்படுத்த வேறு சான்றுகள் தேவைப்படாது. மருந்தடிக்கும் சூழலில் தேனீ வளர்க்க முடியாது. எனவே தேனீ வளர்ப்பு மருந்து தெளிக்காத பயிர்ச்செய்கையையும் மறைமுகமாக ஊக்குவிக்கும்.

எனவே தேனீ வளர்ப்பில் நாம் கூடிய அக்கறை செலுத்தி இயற்கையை பாதுகாப்பதுடன் தேன் உற்பத்தியையும் பெருக்க முயற்சிஎடுக்க வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
**பொது மருத்துவ நிபுணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜினோமோட்டோ பாவனை அதிகரித்து வரும் ஆபத்துக்கள்

அஜினோமோட்டோ என்பது மலிவானதும் சுவை நிறைந்ததுமான ஒருவகை உப்பு என்பது அனைவருக்கும் தெரியும்.இது 100 வருடங்களுக்கு மேலாக மனிதனின் உணவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால் கடந்த சில வருடங்களாக இது சம்பந்தமாக நடந்து வரும் ஆய்வுகள் அதிகரித்த அஜினோமோட்டோ பாவனை பல சுகாதார பிரச் சினைகளுக்கு காரணமாக அமைகிறது என்பதை சுட்டிக்காட்டி நிற்கின்றன.

இதிலே காணப்படும் இரசாயனப்பதார்த்தம் மொனோ சோடியம் குழூடாமேற் (Mono sodium glutamet) எனப்படும் ஒருவகை உப்பு ஆகும்.

இது பலவகையான உணவுவகைகளிலே அதிகமாக சேர்க்கப்பட்டு வருகிறது. குறிப்பாக நூடில்ஸ் வகை, சூப்வகை,பதப்படுத்தப்பட்ட உணவுவகைகள், பேணிகளில் அல்லது பொதிகளில் அடைக்கப்பட்டு வரும் உணவுவகைகள், கடைகளில் விற்பனையாகும் பல உடன் உணவு வகைகள் போன்றவற்றில் அதிகளவு அஜினோமோட்டோ சேர்க்கப்பட்டு வருகிறது.

அதிகரித்த அஜினோமோட்டோபாவனை தலையிடி, படபடப்பு,உடல் எரிவு, விறைப்பு, நித்திரை குறைவு, அதிகரித்த வியர்வை, வாந்தி, களைப்பு போன்ற பல அறிகுறிகளை ஏற்படுத்த முடியும் என்று ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

அத்துடன் அஜினோ மோட்டோ ஆனது பசியைக் கட்டுப்படுத்தும் லெப்ரின் என்ற ஓமோனை நிரோதிப்பதால் பசி அதிகரித்து உடல்நிறை அதிகரிப்பதற்கும் காரணமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜினோமோட்டோ ஆனது அன்ரிஒக்சிடென்ற் இன் தொழிற்பாட்டை நிரோதிப்பதன் மூலம் இரைப்பை, குடற்புற்றுநோய்கள் ஏற்படுவதற்கும் இது காரணமாக அமையலாம் என்று சில ஆய்வுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

கர்ப்பகாலங்களிலே இதன் பாவனை சிசுவுக்கு பாதுகாப்பானது அல்ல என்பதும் ஆண்களிலே இது மலட்டுத் தன்மைக்கு ஒரு காரணியாக அமையலாம் என்பதும் சில அவதானிப்புகள் மூலம் அனு மானிக்கப்பட்டிருக்கிறது.

அஜினோமோட்டோவில் சோடியத்திறனுடைய செறிவு அதிகமாகக் காணப்படுவதால் குருதி அமுக்கத்தை அதிகரிக்கச் செய்வதுடன் உடல்வீக்கத்திற்கும் இது காரணமாக அமையலாம். சிலரில் இது ஆஸ்துமா எனப்படும் முட்டு நோய் கடுமையாவதற்கும் காரணமாக அமைகின்றது.

அளவான அஜினோ மோட்டோ பாவனை பலரில் எதுவித தாக்கங்களையும் ஏற்படுத்தாத காரணத்தால் இது ஒரு தடைசெய்யப்பட்ட உப்பு என்று சுகாதார நிறுவனங்களால் அறிவிக்கப்படவில்லை. ஆனால் கட்டுப்படுத்தப்படாத இதன் அதிகரித்த பாவனை சம்பந்தமாக சுகாதார தரப்பினர் கரிசனைகாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். அஜினோமோட்டோ
அதிகம் உள்ள சில உணவு வகைகள் குறிப்பாக சில நூடில்ஸ் வகைகள் சில நாடுகளில் தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

எமது பகுதிகளில் விற்பனையாகும் பலவகையான உணவுப்பொருட்களில் அஜினோமோட்டோவின் செறிவு அதிகமாகக் காணப்படுகிறது. சமையலின் பொழுதும் உணவின் சுவையை அதிகரிப்பதற்காக அஜினோ மோட்டோ சேர்க்கப்பட்டுவருவது அவதானிக்கப்பட்டுவருகிறது.

எனவே அதிகரித்த அஜினோமோட்டோ பாவனை சம்பந்தமாகவும் அதன் தீய விளைவுகள் சம்பந்தமாகவும் பொதுமக்களிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.அத்துடன் இதன் பாவனையை இயன்றளவு குறைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்

**பொது மருத்துவ நிபுணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுரைகளும் வழிகாட்டல்களும்

மனிதன் ஒவ்வொருவரும் தனித்துவமானவன். அவனின் ஆற்றலும் ஆளுமையும் கூட தனித்துவமானவை தான். ஒவ்வொரு மனிதனுள்ளேயும் அவனுக்கே உரித்தான பல திறமைகள் புதைந்திருக்கின்றன. ஒருவன் போன்று இன்னொருவன் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. அவ்வாறு இருக்கவும் முடியாது.

எமது பழைய பதிவுகளை புரட்டிப்பார்ப்போமாக இருந்தால் பாரதியார் போன்று திருவள்ளுவர் இல்லை. அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி போன்று ஆறுமுகநாவலர் இல்லை. தியாகி பொன் சிவகுமாரன் போன்று தந்தை செல்வா இல்லை. நடிகர் விவேக் போன்று வடிவேலு இல்லை. இவர்கள் ஒவ்வொருவருமே ஆற்றலும் அர்ப்பணிப்பும் உள்ளவர்கள் தான் ஆனால் ஒருவர் போல் மற்றவர்கள் மாறுவதற்கு முயற்சிசெய்யவில்லை. ஒவ்வொருவருமே தமது பாணியில் பயணித்து மக்களின் மனதில் இடம்பிடித்திருக்கிறார்கள்.

துர்அதிஷ்டவசமாக நாம் எமது பிள்ளைகளையும் மாணவர்களையும் வழிநடாத்த அல்லது நல்வழிப்படுத்த முயலும்பொழுது இன்னொருவருடன் ஒப்பிட்டு பேசும் பழக்கத்தை வளர்த்து வைத்திருக்கின்றோம். இது ஒரு வேதனையான உண்மை.

"அவனைப்பார் 4 மணிக்கு எழும்பிப்படிக்கின்றான் ஆனால் நீ" , "அவன் உடைய எழுத்தைப் பார் உன்னுடைய எழுத்தையும் பார்.." , " அவன் எழும்பி எவ்வளவு உசாராய் கதைக்கின்றான் அவனை பார்த்து பழகு.." , "அந்தக் காலத்திலே நான் என்னமாதிரி எல்லாம் செய்தனான் ஆனால் நீ "

இவ்வாறாக ஒருவனைப்போல இன்னொருவனை படம் போட்டு மாற்றுவதற்கு கடுமையாக முனைந்து நிற்கின்றோம் எதற்கு எடுத்தாலும் ஒப்பிட்டு கதைப்பதை அன்றாட நடவடிக்கையாகக் கொண்டிருக்கின்றோம்.

ஒருவனிற்கான அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அவன் சார்ந்த அவனது நிறைகுறைகள் சார்ந்ததாக அவனது சுபாவம் சார்ந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டுமே அன்றி ஒப்பிடும் பொறிமுறையாக இருக்க முடியாது. ஒப்பிட்டு அறிவுரை சொல்ல முயல்வது அவர்களை காயப்படுத்தி பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதுடன் குளிக்கபோய் சேறு பூசிய கதைபோல அல்லது பிள்ளையார் பிடிக்க குரங்காக மாறிய கதைபோல் ஆகிவிடுவதுடன் அது அவர்களின் பல சுகாதாரப்பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும்.

ஒப்பிட்டு பேசுவதால் ஏற்படும் தீயவிளைவுகளை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். அவற்றில் முக்கியமானவை மனக்குழப்பம், விரக்தி , பொறாமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு, கற்றல் செயற்பாடுகளில் ஆர்வக்குறைவு போன்றவையாகும். சகோதரர்களிடையே பொறாமை உணர்வு வளர்வதற்கும் இது காரணமாகிவிடுகின்றது.

பிள்ளைகளை வழிநடாத்தும் போது எமது முக்கியமான இலக்கு எதுவாக இருக்கவேண்டும் என்று சிந்திப்பது பயனுடையதாக அமையும். இந்த இலக்கு பரீட்சைகளில் சித்திபெறுவதா? உயர்கல்வி கற்பதா?, போட்டிகளில் வெற்றி பெறுவதா? , செல்வம் சேர்ப்பதா?, அல்லது நல்ல மனம் கொண்ட மனிதாபிமானமுள்ள ஒரு மனிதனாக உருவாக்குவதா ? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதற்கு ஒப்பிட்டு பேசப்படும் பேச்சு உதவியாக அமையாது.

சுயமாக ஒருவன் சிந்தித்து வாழ்வில் உயர்ச்சி அடைவதற்கு அவனில் உள்ள திறமைகள் அடையாளப்படுத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அந்தத் திசையிலே அவனை முன்னேறுவதற்கு அவன் சார்ந்த அறிவுரைகளும் வழிகாட்டல்களும் உதவியாக இருக்கும். ஆனால் இது ஒரு பொழுதும் ஒப்பிட்டுப் பேசும் பேச்சாக அமைந்துவிடக்கூடாது.

Dr.சி.சிவன்சுதன்

**பொது மருத்துவ நிபுணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 06 . 12 . 1948



உதிர்வு 05 . 05 . 2019

நீர்வேலி நலன்புரிச் சங்கம் இலண்டன் அமைப்பின் செயலாளர்
திரு.செ.செல்வநாதன் அவர்களின் அன்புச்சகோதரன்

அமரர்

## செல்வநாயகம் கமலநாதன்

இல்லறத்தில் இன்பமாய் வாழ்ந்து நல்லறத்தில்
ஆண்டு பல கழித்து
விதியவன் வினைப் பயனால் விண்ணுலகுக்கு
சென்று விட்டீர்கள்
அன்பான பேச்சு, பண்பான குணம்
பாசமுடன் அரவணைக்கும் குணம் கொண்டவரே!
பார்போற்ற வாழ்ந்து நொடிப்பொழுதில் மறைந்து
குடும்பத்தாரை தவிக்க விட்டீரே!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மெது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்....

நீர்வேலி நலன்புரிச்சங்கம் லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
06 . 12 . 1948



உதிர்வு
05 . 05 . 2019

## அமரர் செல்வநாயகம் கமலநாதன்

அன்புக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவரே
நன்றாய் நாம் வாழ நல்ல வழி காட்டியலவரே
இடையிலே எம்மை இவ்வுலகில் பரிதவிக்க விட்டுவிட்டு
பக்கத்தே இல்லாமல் எங்கு தான் சென்றுவிட்டீர்
ஓலமிட்டு அழுகின்றோம் ஒருமுறை பாருங்கள்
மண்ணுலகில் நாம் உய்ய நல்வழி காட்டிவிட்டு
விண்ணுலகில் நீர் இன்று விந்தையான மாயமென்ன
இறைவனோடு ஐக்கியமாய் உன் ஆன்மா நிலைத்திடும்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்....

தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள், அரசறிவியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
06
.
12
.
1948



உதிர்வு
05
.
05
.
2019

## அமரர் செல்வநாயகம் கமலநாதன்

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்
பூக்களாய் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த்துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்....

உதவி மாவட்ட செயலாளரும், நிர்வாகக்கிளை உத்தியோகத்தர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட கண்ணீர் அஞ்சலிகள்

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்.மாவட்ட செயலகத்தில்
கடமையாற்றும்
வி.கிருஷாந்தியின் அன்புத் தந்தை

**செல்வநாயகம் கமலநாதன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்
களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்
(சமூக சேவைகள்) யாழ்.மாவட்டம்.

(K610)(11.17)

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாண மாவட்டச் செயலக நிர்வாக கிளையில் சமூக
சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி கிரிசாந்தி விக்னேஸ்வரன் அவர்களின் அன்புத்தந்தை

**செல்வநாயகம் கமலநாதன்**

அவர்கள் கடந்த 05.05.2019 ஆம் திகதி இறைபதம்
அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச்
செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்**

**கண்ணீர் அஞ்சலி**



அரசறிவியல் துறையின்
சிரேஷ்ட விரிவுரையாளரும் அரசறிவியல்
ஒன்றியத்தின் பெரும் பொருளாளருமான
**ரி.விக்கினேஸ்வரனின்** அன்பு மாமனார்

**செல்வநாயகம் கமலநாதன்**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அரசறிவியல் துறை அரசறிவியல் ஒன்றியம்**
**யாழ். பல்கலைக்கழகம்**

## மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர்

1. அண்ணா - தம்பி செ.செல்வநாதன்
2. நீர்வேலி நலன்புரிச்சங்கம் - இலண்டன்
3. சமூகசேவைத் திணைக்களம் - யாழ்.மாவட்டச்செயலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

# தமிழ் ஆசௌச தீபிகை

பிரமஸ்ரீ.ஆ.சபாரத்தினக்குருக்கள் அவர்கள் இயற்றிய தாத்பரிய உரையுடன்
ஆசிரிய விருத்தமும் – பூரணாசௌசசங்கை – சற்சூத்திரலக்ஷணம் – விசேடம்
– சபிண்டீகரணம் –

## ஆசிரிய விருத்தம்

பருத்தித்துறை – சம்ஸ்கிருத திராவிட பண்டிதரும்
பிரபல சோதிட கணித சித்தாந்தியுமாகிய
பிரமஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் சொல்லியது

சீர்மேவு சைவநெறி முறைவ ழாத
சிறப்புமிகு மாசௌ தீபி கைக்கு
நேர்மேவு கருத்துரையை நினைவி னாக்கி
நீணிலத்தோர் புகழும்வகை யச்சி லிட்டான்
ஏர்மேவு துன்னைநகர் வாசன் சீல
னிருமொழியு மினிதுபயின் றறிவு மிக்கான்
பேர்மேவு மாறுமுக மறையோ னீன்ற
பெட்புமிகு சபாரத்ன குரவன்றானே.

## பூரணாசௌசசங்கை

பூரணவாசௌசமுறைபுகலுங்கானல்ல
ஆரணருக்கையிருநாளரசருக்கீராறாஞ்
சீரணவுமூவைந்துசெட்டிசற்சூத்திரர்க்காம
ஏரணவுமுழவர்தமக்கிருமூவைந்தாமே.

பூரணாசௌசம் பிராமணருக்கு பத்து நாளும், அரசருக்கு பன்னிரண்டு நாளும், வைசியர்க்குஞ் சற்சூத்திரர்க்கும் பதினைந்து நாளும், அசற்சூத்திராருக்கு முப்பது நாளுமாம்.

## சற்சூத்திர லக்ஷணம்

அடுத்தமதுவூன்விடுத்தங்கருந்துணைவியோடு
மம்புவிமேல்வாழுஞ்சற்சூத்திரன்பாலுதித்தே
எடுத்தசற்சூத்திரனானோன்றீக்கைபெறிலவனை
யெழில்வணிகர்க்கிணையெனவேயியம்புமினிச்சொல்வாந்
தொடுத்தமுதற் சூத்திரனுஞ்சுதனுஞ்வைசவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையிலபிடேகாந்தம்பெற்றிடுவரிவர்க்கு
வடுத்தவிராசௌதினம்பதினொன்றீரெட்டு
வருநாலைந்தையைந்துமதிக்கசமயாந்தம். 24

மதுபானம், மாமிசபக்ஷணமென்று மிவைகளை விடுத்துக் கிருகஸ்தனாக வாழுங் சற்சூத்திரனிடத்துப் பிறந்த சற்சூத்திரன் தீக்ஷை பெற்றாலவன் வைசியரை யொப்பான். மதுமாமிசபக்ஷணம் விட்டவனாகிய முதற்சூத்திரனுமவன் மகனுங் சமயதீக்ஷைபெற்றால் இருபத்தைந்துநாளும், விசேதீக்ஷையும் பெற்றால் இருபது நாளும், நிர்வாணதீக்ஷையும் பெற்றாற் பதினாறுநாளும் அபிஷேகமும் பெற்றாற் பதினொறு நாளுமா சௌசமனுட்டித் தற்குரியவராவர்.

## விசேடம்

பெருத்தமரணாசௌசந்தனிலற்பமரணம்
பிறந்தாலும்பெரியசனனாசௌசமதனில்
இருந்தவருஞ்சிறியபவாசௌசமடைந்திடினு
மேகியிடும்பெரியதனோடென்றறைவரிடர்தாம்
பொருத்தவருமதிகமதாற்குறைந்ததுபோமதிகம்
போகாது குறைந்ததனாலென்றுபுகன்றிடுவர்
வருத்தமற்றசபிண்டர்தமக்காசௌசமன்றால்
வாயுரையிற்கேட்கவருமாசௌசம்வகுப்பாம். 81

பெரியமரணாசௌசத்திற் சிறியமரணாசௌசம் வந்தாலும் பெரியசனனாசௌசத்திற் சிறிய சனனாசௌசம் வந்தாலும் வந்த அச்சிறிய ஆசௌசங்கள் பெரிய ஆசௌசங்களோடு போய்விடும். பெரியதினாலே சிறியது நீங்கும். சிறியதினாலே பெரியது நீங்காது.

## சபிண்டீகரணம்

அச்சபிண்டீகரணந்தான்பிரேதமோசனமா
மதையொழிந்ததகனாதிபிரேதகன்மமவைதாம்
நிச்சயமாந்தகனம்பாடாணத்தாபனநன்
னீராற்செய்தர்ப்பணம்பிண்டப்பிரதானஞ்சீர்
வைச்சவத்திசஞ்சயனநக்கினத்தைமுடன்
மருவேகோத்தரவிருத்திபோசனந்தானவமா
யிச்சகமெண்சிராத்தமெழிலேகோத்திட்ட
மேறியிடும்பஞ்சதசசோதகும்பச்சிராத்தம். 143

சபிண்டீகரணசீராத்தமென்பது பிரேதத்துவத்தை நீக்கிப்பிதிர் கணத்தோடு சேர்க்குங் கிரியையாம். இதற்குமுன் செய்யப்படும் தகனாதிகிரியைகள் பிரேதகன்மமெனப்படும்... அவையாவன – தகனம், பாஷாணத்தாபனம், தருப்பணம், பிண்டப்பிரதானம், அத்திசஞ்சயனம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கினப்பிரச்சாதனம், ஏகோத்தர விருத்திபோசனம், நவசிராத்தம், ஏகோத்திட்டம், பஞ்சதசமாசிகசிராத்தம், சோதகும்பசிராத்தம் என்பனவாம்.

இவைகண்முதலானவெலாமுன்புரியுங்கன்ம
மெய்துபிரதானனுக்குமற்றையர்க்கும் பொதுவாம்
நவையில்சபிண்டீகரணம்பிரதானன்செய்யு
நற்கன்மமென்றறிகநவின்றதகனாதி
அவைதனக்கிங்கதிகாரியாவிருபதின்ம
ரானவிவர்தம்பெயருமுறையுமறைந்திடுவாங்
குவைதருஞ்சீர்ப்புத்திரன்நன்மனைவிமகளன்பு
கூரவுடன்பிறந்தானிங்குரைத்தவிவர்மைந்தர் 144

கூறுபிதாதாயரியமருமகளோங்கன்பு
குலவுசகோதரியவடன்புதல்வனருட்சபிண்டர்
வீறுசமானோதகர்தாய்சபிண்டர்சோதகராக
மேவியுளார்சீடனொடுவியன்குரவன்கொண்ட
பேறுபெறுமருகனன்பார்தோழனடலரசன்
பேசுமிவரென்றறிகபிறங்கிவரிலுண்மை
தேறுபிரதானன்புத்திரனொழிந்தோரெல்லாந்
சேரிரண்டாம்பிரதானரெனவறிகதெளிந்தே. 145

இங்கே சொல்லிய தகனம் முதலிய கிரியைகள் சபிண்டீகரணத்தின் முன்செய்ய வேண்டிய கருமங்களாம். ஆதலின் பிரதானகருத்தாவுக்கும் மற்றையவர்களுக்கும் பொதுவாம். சபிண்டீகரணம் பிரதானகருத்தாவுக்கேயுரிய கிரியையாம். குறித்த தகன முதலிய கிரியைகளுக்கு வரிசையாய் இருபதின்மராவார்.

| | | |
|---|---|---|
| 1. புத்திரன் | 2. மனைவி | 3. மகள் |
| 4. மகள் புதல்வன் | 5. சகோதரன் | 6. சகோதரன் புதல்வன் |
| 7. பிதா | 8. மாதா | 9. மருமகள் |
| 10. சகோதரி | 11. சகோதரி புதல்வன் | 12. பிதிர்வழிச்சபிண்டன் |
| 13. சமானோதகன் | 14. தாய்வழிச்சபிண்டன் | 15. தாய்வழிச்சமானோதகன் |
| 16. சீடன் | 17. குரு | 18. பெண்கொண்ட மருகன் |
| 19. தோழன் | 20. அரசன் என்பவர்களாவர். | |

குறித்த இவர்களுள் புத்திரனே பிரதான கருத்தனாவன், ஏனையோர் இரண்டாம் பிரதானராவர்.

சுக்கில — இங்ஙனம்
தை மீ — ஆ.ச.கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

- திருக்குறள் -

திரு.செல்வநாயகம் கமலநாதன் அவர்கள் நோயுற்ற காலத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் 8ம் இலக்க விடுதியில் தங்கியிருந்த போது சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர்களுக்கும், அனைத்து வைத்தியர்களுக்கும் தாதியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

05.05.2019இல் இறைவன் தாள் சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றியோருக்கும் பல்வேறு வகைகளில் உதவிகள் ஒத்தாசை புரிந்து எம்மை ஆறுதல்படுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் லண்டனில் வதியும் அவரது மகனின் வதிவிடத்திற்கு நேரில் சென்றும், தொலைபேசி மூலமும் இணையத்தளமூடாகவும், பத்திரிகை வாயிலாகவும் துண்டுப் பிரசுரமாகவும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்றைய அந்தியேட்டிக் கிரியையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றி என்றும் உரியது. இம்மலரினை உரியநேரத்தில் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய S.P.M பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வல்லியானந்தம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.



அன்புடன்
-குடும்பத்தினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையாமை



விட்டுவிடப் போகுதுயிர்! விட்ட உடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார். அட்டியின்றி
எந்நேரமும் சிவனை ஏந்துங்கள்! போற்றுங்கள்
சொன்ன அதுவே சுகம்!

எத்தனை நாள் கூடி எடுத்த சரீரம் இவை?
அத்தனையும் மண்தின்பதல்லவோ? வித்தகனார்
காலைப் பிடித்து மெல்லக் கங்கு பகல் அற்றிடத்தே
மேலைக் குடியிருப் போமே!

சிற்றம் பலமும் சிவனும் அருகிருக்க
வேற்றம் பலம்தேடி விட்டோமே – நித்தம்
பிறந்த இடம் தேடுதே பேதைமட நெஞ்சம்
கறந்த இடம் நாடுதே கண்!

இருக்கும் இடம்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன் – பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி!

மேலும் இருக்க விரும்பினையே! வெண்விடையோன்
சீலம் அறிந்திலையோ! சிந்தையே! – கால்கைக்குக்
கொட்டை இட்ட மெத்தை இட்டு குத்திமொத்தப்
பட்ட உடல் கட்டை இட்டுச் சுட்டுவிடக் கண்டு!

பொய்யை ஒழியாய் புலாலை விடாய்! காளத்தி
ஐயரை எண்ணாய்! அறம் செய்யாய் – வெய்ய
சினமே ஒழியாய்! திருவெழுத்தைந்து ஓதாய்
மனமே உனக்கென்ன மாண்பு!

அச்சமைப்பு: S.P.M, வி.எம்.றோட், பருத்தித்துறை. T.P.No: 021 2260055, 0774966997
E.mail: puvan2009@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org